ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1879/19 - 2014 සැප්තැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2014.09.12
*1879/19 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை**

(நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு).

**சப்பிரகமுவ மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, சப்பிரகமுவ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டம்**

2014.07.22 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் கௌரவ தவிசாளர் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

2014.08.06 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை**

சப்பிரகமுவ மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, சப்பிரகமுவ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டம்.

2014.06.24 ஆந் திகதி சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2014.08.06 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சப்பிரகமுவ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுகின்ற இந்த நியதிச் சட்டம் அனைவரும் அறிந்து கொள்வதற்காக இங்கு கீழே பிரசுரிக்கப்படுகின்றது.

லலித் தொடம்கொட்டுவ,
சபைச் செயலாளர்,
சப்பிரகமுவ மாகாண சபை.

சப்பிரகமுவ மாகாண சபை,
2014, செத்தெம்பர் 10.

## சப்பிரகமுவ மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு நியதிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் பதின்மூன்றாம் அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் 154(எ) (1) பிரிவின் பிரகாரம், சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு என அறிமுகப்படுத்தப்படுகின்ற ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிப்பதற்கும், சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் தொடர்பிலான கருமங்களைச் செய்வதற்கும் அத்துடன் முற்கூறிய கருமங்களின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்குமானவொரு நியதிச்சட்டமாகும். (இந்நியதிச் சட்டம் 1992 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கக் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கக் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுச் சட்டத்துக்கு அனுகூலமற்றதாகும்.)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாண சபையினால் பின்வருமாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயர்

1. இந்நியதிச் சட்டம் சப்பிரகமுவ மாகாணசபையின் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படும்.

செயற்படும் திகதி.

2. சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட திகதி தொடக்கம் இந்நியதிச் சட்டம் செயற்படும்.

### I ஆம் பகுதி

### சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவை ஸ்தாபித்தல், அதன் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழுவை ஸ்தாபித்தல்.

3. இந்நியதிச் சட்டத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக இதனகத்து இதன் பின் ஆணைக்குழு என அறிமுகப்படுத்தப்படுகின்ற சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படுகின்றது.

சட்டரீதியாக்கப் பட்ட கூட்டுத்தாபன மொன்றாதல் வேண்டும்.

4. ஆணைக்குழுவானது பொது இலட்சினை உடையவொரு சட்ட ரீதியாக்கப்பட்ட கூட்டுத்தாபனம் ஒன்றாதல் வேண்டும். அத்துடன் அது சட்டரீதியான கூட்டிணைக்கப்பட்ட நிலையில் வழக்குகள் தொடர்வதற்கும் தொடரச் செய்வதற்கும் இந்நியதிச் சட்டத்தின் பணிகளுக்காகத் தேவைப்படக்கூடிய அனைத்துக் கருமங்களைச் செய்வதற்கும் அதிகாரமுடைய சட்டரீதியாக்கப்பட்ட கூட்டுத்தாபனம் ஒன்றாதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் அமைப்பு.

5. (1) ஆணைக்குழுவானது, அமைச்சரால் நியமனம் செய்யப்படுகின்ற மூன்று அங்கத்தவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) எவரேனுமொரு நபர்,

(அ) கூட்டுறவுச் சங்கமொன்றின் ஊழியர் ஒருவராயின் அல்லது முன்னாள் ஊழியரொருவராயின்;

அல்லது

(ஆ) அமைச்சரின் கருத்தின்படி கூட்டுறவு ஊழியர்களின் சம்பளங்கள், வேதனங்கள் அல்லது நிபந்தனைகளை ஒழுங்கு செய்யும் நோக்கமாக நடத்திச் செல்லப்படும் ஊழியர் தொழிற்சங்கம் ஒன்றின் உறுப்பினர் ஒருவராக இருக்கும் ஒருவராயின் ;

அல்லது

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பிலான சட்டத்தின்படி கூட்டுறவுச் சங்கமொன்றின் உத்தியோகத்தர் ஒருவராக இருக்கும் ஒருவராயின் ;

அல்லது

(ஈ) மனநிலை குன்றிய ஒருவராக அல்லது சொத்துக்களை இழந்த ஒருவராக அல்லது தண்ட விதிக்கோவையின் கீழ் அல்லது இலஞ்சச் சட்டத்தின் கீழ் குற்றவாளி என நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவராயின் ;

அல்லது

(உ) ஏற்புடைய கால எல்லையில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபையின் உறுப்பினர் ஒருவராக அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் அங்கத்தவர் ஒருவராக பதவி வகிக்கும் ஒருவராயின் ;

அவர் அந்த ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவராக நியமனம் செய்யப்படுவதற்கு தகைமையற்றவராவார்.

6. அமைச்சரால் நீக்கப்படாதிருந்தால் அல்லது இந்நியதிச் சட்டத்தின் 5 (2) ஆம் பிரிவின் பிரகாரம் தகைமையற்றவர் ஒருவராக்கப்படாவிட்டால் அல்லது அங்கத்தவரொருவர் தன் விருப்பத்தினாலே பதவி விலகாமல் இருந்தால் அனைத்து அங்கத்தவர்களும் நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடகாலம் தமது பதவிகளை வகித்தல் வேண்டும்.

அங்கத்தவர்களின் பதவிக் காலம்.

எவரேனுமொரு அங்கத்தவரின் பதவி நீக்கம் அல்லது இராஜினாமா அல்லது இறப்பு காரணமாக ஏற்படும் பதவி வெற்றிடம் ஒன்றுக்காக நியமனம் செய்யப்பட்ட ஒருவரின் பதவிக்காலமானது, வேறு பணிப்புகள் இடப்படாதிருந்தால், ஏனைய அங்கத்தவர்களின் பதவிக்காலம் முடிவடையும் தினத்துடன் முடிவடையும்.

7. (1) அமைச்சரால் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுள் ஒருவர் அதன் தவிசாளராக நியமனம் செய்யப்படுதல் வேண்டும். தவிசாளர் சமுகமளித்திருக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர் ஆணைக்குழுக் கூட்டங்களில் தலைமை வகித்தல் வேண்டும். தவிசாளர் சமுகமளித்திருக்காத சந்தர்ப்பங்களில் சமுகமளித்திருக்கும் ஏனைய அங்கத்தவர்களுள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் கூட்டத்திற்கு தலைமை வகித்தல் வேண்டும்.

தவிசாளர் மற்றும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லல்.

(2) ஆணைக்குழுவின் கூட்டங்களில் நிறைவெண் பூர்த்தியடைவதற்கு கூட்டத்திற்கு இரண்டு அங்கத்தவர்கள் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

(3) இரண்டு அங்கத்தவர்கள் மாத்திரம் சமுகமளித்து இருக்குமொரு சந்தர்ப்பத்தில் ஏதாவதொரு காரணம் தொடர்பில் தீர்மானமெடுக்க இயலாதிருக்கும் போது, அக்காரணத்தை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் மூவரும் சமுகமளித்திருக்கும் ஒரு கூட்டத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் மூன்று அங்கத்தவர்களும் சமுகமளித்திருக்கும் ஒரு கூட்டத்தில் ஏதாவதொரு காரணம் தொடர்பில் அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் கூடுதலானோர்களின் கருத்திற்கிணங்க தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும். அவ்வாறாயினும் அங்கத்தவர்கள் சமனான இரு பிரிவுகளாகப் பிரிந்தால், தவிசாளருக்கு தீர்ப்பளிக்கும் வாக்கு பிரயோகிக்கும் உரிமை உண்டு.

(5) ஆணைக்குழுவில் அங்கத்தவர்களின் பதவி வெற்றிடம் நிலவுவதன் காரணமாக அல்லது நியமனம் செய்தல் தொடர்பில் ஏற்படும் குறைபாடொன்றின் காரணமாக அல்லது அக்காரணம் தொடர்பில் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் அல்லது இடப்படும் பணிப்புகள் அல்லது கட்டளைகள் எதுவும் செல்லுபடியற்றதாகாமல் இருத்தல் வேண்டும் அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படாதிருத்தல் வேண்டும்.

(6) தமது செயற்திட்டங்களை ஒழுங்கு செய்து கொள்ளல் தொடர்பில் மேற்கூறிய காரணங்களின் மூலம் நிறைவேறாத ஏதாவதொரு காரணம் தொடர்பில் தேவையாகும் ஏற்பாடுகளை ஒழுங்கு செய்து கொள்வதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு இருக்கும்.

8. சப்பிரகமுவ மாகாண சபையின் நிதிவிடயம் பொறுப்பான அமைச்சரின் இணக்கத்துடன் ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் செலுத்த வேண்டிய உழைப்புப் படிகளும் கொடுப்பனவுகளும் அமைச்சரால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

அங்கத்தவர்களுக்கு உழைப்புப் படிகளைச் செலுத்தல்.

9. (1) ஆணைக்குழுவிற்குச் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும். அத்துடன் அவர் இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவராகவும் இருத்தல் வேண்டும்.

செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள்.

(2) ஆணைக்குழுவின் ஏனைய பணியாட்டொகுதிக்கு மாகாண அரசாங்க ஊழியர்களை நியமனம் செய்தல் வேண்டும். இவ்வூழியர்கள் மாகாண அரசாங்க சேவையின் தொடர்புடைய நிர்வாக மற்றும் ஒழுக்காற்று விதிகளுக்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

*ஆணைக்குழுவின் அங்கத்தவர்களும் ஏனைய உத்தியோகத்தர்களும் சத்தியப் பிரமாணம் செய்தல்.*

10. (1) ஆணைக்குழுவின் தவிசாளராகவும் அங்கத்தவர்களாகவும் நியமனம் செய்யப்பட்டவர்கள் தமது பதவியின் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன் இந்நியதிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையிலுள்ள படிவத்தின் பிரகாரம் சத்தியப் பிரமாணம் செய்தல் அல்லது உறுதிமொழி கூறுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் செயலாளரும் ஏனைய உத்தியோகத்தர்களும் ஆணைக்குழுவின் தவிசாளரின் முன்னிலையில் இந்நியதிச் சட்டத்தின் 02 ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும் அல்லது உறுதிமொழிப் பிரகடனம் செய்தல் வேண்டும்.

*ஆணைக்குழுவின் அதிகாரங்கள்.*

11. (1) ஆணைக்குழுவிற்கு பின்வரும் அதிகாரங்கள் இருத்தல் வேண்டும்.

(அ) கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்து ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவி உயர்வுகளுக்கும் ஏற்புடைய நிபந்தனைகள் மற்றும் கோட்பாடுகள் அடங்கிய பணித்திட்டங்களை ஒழுங்கு செய்தல். மேற்கூறிய பனித்திட்டத்திற்கு வெளிவாரியாக அல்லது அப்பணித்திட்டத்தை மீறி செய்யப்படும் அனைத்து ஆட்சேர்ப்புக்கள் மற்றும் நியமனங்கள் சட்ட ரீதியானவைகளாக இருக்கமாட்டாது ; அத்துடன் அத்தகைய ஊழியர்களுக்குச் செலுத்தப்படும் சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் உழைப்புப் படிகள் என்பன ஏற்புடைய பணிப்பாளர் சபைக்கு மிகை விதிப்பாக இருத்தல் வேண்டுமென கட்டளையிடுதல் ;

(ஆ) தேவைப்படும் சந்தர்பங்களில் கூட்டுறவுச் சங்க ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அத்தகைய பரீட்சைகளை நடாத்தும் குழுக்களைப் பெயர்குறித்தல் அத்துடன் அத்தகைய பரீட்சைகளுக்கான கட்டணங்களைத் தீர்மானித்தல் ;

(இ) ஆணையாளருடன் கலந்தாலோசித்து அத்தகைய ஏதாவதொரு பதவிக்கு நியமனம் செய்வதற்குத் தேவையான தகைமைகளைத் தீர்மானித்தல் ஏதாவதொரு வகுப்பிற்கு அல்லது வர்க்கத்திற்கு அத்தகைய ஏதாவதொரு பதவிக்கு அல்லது பதவிகளுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளத்திட்டங்களைத் தீர்மானித்தல், அத்தகைய சம்பளத் திட்டங்களை காலத்துக்குக்காலம் மீளமைத்தல் அல்லது ஒழுங்கு செய்தல், அத்துடன் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் உழைப்புப் படிகள் மற்றும் சேவை நிபந்தனைகளை நிச்சயிக்கும்போது ஆணைக்குழுவிற்குத் தேவைப்படுமெனக் கருதக்கூடிய ஆலோசனைக் குழுக்களை ஸ்தாபித்தல் ;

(ஈ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற சம்பளத் திட்டங்களின்படி சம்பளங்களைச் செலுத்துமாறு சங்கங்களைப் பணித்தல் ;

(உ) கூட்டுறவுச் சங்கங்களினால் தமது ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய செயற்திட்டங்களைத் தீர்மானித்தல். அவற்றை நடத்துவதற்கான அதிகாரமளித்தல் மற்றும் குறித்துரைக்கப்படும் கால எல்லைக்குள் ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தி முடிவுபெறச் செய்யும்படி சங்கங்களைப் பணித்தல்;

(ஊ) ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் காரணமாக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் விசாரணைகளை நடாத்துதல்;

(எ) தமது ஊழியர்கள் தொடர்பில் கூட்டுறவுச் சங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்படக்கூடிய அறிக்கைகள் எவையெனத் தீர்மானித்தல் ;

(ஏ) எந்தவொரு ஊழியர் தொடர்பிலும் ஆணைக்குழுவிற்குத் தேவைப்படக்கூடிய கடிதக்கோவைகள், ஏனைய ஆவணங்கள் மற்றும் விபர அறிக்கைகள் என்பன குறிப்பிட்ட தினத்திற்கு முன் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கும்படியும் வழங்கும் படியும் எந்தவொரு சங்கத்திற்கும் பணிப்பிடும் அதிகாரம் ;

(ஐ) ஆணைக்குழுவினால் முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் தேவையான விசாரணைகளை நடத்தி சிபாரிசுகளுடனான அறிக்கைகளை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக மேன்முறையீடு விசாரணை செய்யும் உத்தியோகத்தர் ஒருவரை அல்லது உத்தியோகத்தர் குழுக்களைப் பெயர் குறித்தல் ;

(ஒ) தமது செயற்பாடுகள் ஒழுக்காற்றுச் சோதனையொன்றின் விடயக் காரணமொன்றாக இருக்கும் ஏதாவதொரு சங்கத்தின் எந்தவொரு ஊழியராலும் அச்சங்கத்தினால் இடப்பட்ட ஒழுக்காற்றுக் கட்டளை ஒன்றுக்கு எதிராக ஆணைக்குழுவிடம் மேன்முறையீடொன்று சமர்பிக்கப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அத்தகைய மேன்முறையீடொன்றின் மீது கவனம் செலுத்தி சங்கத்தினால் அளிக்கப்பட்ட தீர்ப்பில் மாற்றம் செய்வதற்கு இலகுவாக்குவதற்கு, இரத்துச் செய்வதற்கு அல்லது அதற்குப் பதிலாக ஏனையவொரு தீர்மானத்தை எடுப்பதற்கு அல்லது மீண்டும் விசாரணையொன்றை நடத்துமாறு கட்டளையிடுவதற்கு அல்லது அத்தகையவொரு ஊழியரை மீளவும் சேவையில் சேர்த்துக்கொள்ளல் உட்பட ஆணைக்குழுவினால் இடப்படும் கட்டளைகள் மற்றும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறும் அத்துடன் அதில் குறிப்பிட்டவொரு திகதியில் அல்லது குறிப்பிட்டவொரு திகதிக்கு முன்னர் செயற்படுத்துமாறும் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டளையிடுதல் ;

(ஓ) ஒழுக்காற்று நடவடிக்கையொன்றின் காரணமாக அல்லது ஏனையவொரு காரணத்தினால் ஊழியர் ஒருவரின் சேவையை முடிவுபெறச் செய்யுமொரு சந்தர்ப்பத்தில், தேவைப்படுமாயின் பணிக்கொடைகள் நட்டஈடுகள் அல்லது ஏனைய பிரதிலாபங்களை ஊழியர்களுக்குப் பெற்றுக்கொடுத்தல் தொடர்பில் கொள்கைகளைத் தீர்மானித்தல் ;

(ஔ) அமைச்சரால் ஒழுங்கு செய்யப்பட்டஒழுங்கு விதிகளின் மூலம் தீர்மானிக்கப்படுகின்ற ஏதாவதொரு பணத்தொகை வைப்புச் செய்யுமாறு மேன்முறையீட்டாளருக்குப் பணிப்பிடுவதற்கும் மேன்முறையீட்டின் விசாரணைக்குப் பின்பு மேற்கூறிய வைப்புச் செய்யப்பட்ட பணத்தொகை தடுத்து வைத்துக் கொள்வதற்கு அல்லது மீளச் செலுத்துவதற்கு உத்தரவிடுதல் ;

(2) (1) ஆம் உப பிரிவின் (ஊ), (ஐ), (ஔ) ஆகிய பந்திகளின் ஏற்பாடுகள் தவிர்ந்த ஏனைய பந்திகளின் மூலம் ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் செயற்படுத்துகையில் ஆணைக்குழுவினால் செய்யப்பட்டவொரு தீர்மானத்தில் அல்லது இடப்பட்டவொரு கட்டளையில் மாற்றங்களைச் செய்வதற்கான அல்லது அவற்றை நீக்கம் செய்வதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு இருக்கும்.

12. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்குத் தேவைப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகள் மாகாண சபையினால் வருடாந்தம் ஒதுக்கப்படுதல் வேண்டும். நிதி ஒதுக்கீடுகள்.

II ஆம் பகுதி

**கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அவற்றின் பணியாட்டொகுதிகள்**

13. எவரேனுமொரு ஊழியர் தொடர்பில் சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்தும் கூட்டுறவுச் சங்கமானது அந்த ஊழியரின் தொழில் வழங்குநராதல் வேண்டும். கூட்டுறவுச் சங்கமானது, தொழில் வழங்குநர் ஒருவராதல் வேண்டும்.

14. எந்தவொரு கூட்டுறவுச் சங்கமும் அதன் நிதியத்திலிருந்து அச்சங்கத்தின் ஊழியர்களுக்கு சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும். கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் சம்பளங்கள்.

கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் ஊழியர்களும் ஆணைக் குழுவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும் என்பது பற்றி.

15. எந்தவொரு கூட்டுறவுச் சங்கமும் அத்துடன் அச்சங்கத்தின் அனைத்து ஊழியர்களும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் இடப்படக்கூடிய கட்டளைகளின் கீழ் செயல்புரிதல் வேண்டும். இந்நியதிச் சட்டத்தின் கீழான கட்டளைகள் மற்றும் அதிகாரங்களை நிறைவேற்றுகையிலும் செயற்படுத்துகையிலும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் அனைத்துத் தீர்மானங்களும் 11 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழான கட்டளைகளும் இறுதியானவைகளாக இருத்தல் வேண்டும். அத்துடன் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் ஊழியர்களும் மேற்கூறிய கட்டளைகளின்படி செயல்புரிவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் கட்டளைகளால் கூட்டுறவு ஊழியர்கள் கட்டுப்படுவார்கள் என்பது பற்றி.

16. ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கத்தின் எவரேனுமொரு ஊழியர் தொடர்பில் ஆணைக்குழுவினால் இடப்படும் அனைத்துக் கட்டளைகளும் 11 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இறுதியானவைகளாக இருத்தல் வேண்டும். அத்துடன் அக்கட்டளைகள் சங்கத்தினால் இடப்பட்டவைகளாகப் போன்று ஊழியரால் அக்கட்டளைகளின்படி செயல் புரிவதற்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு நியதிச் சட்டம் காரணமாக ஏற்படும் மாற்றங்கள்.

17. (1) இந்நியதிச்சட்டத்தின் கீழ் சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியரகள் ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் தினத்தில் அல்லது அதற்குமுன், 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டுறவு ஆணைக்குழுவினால் போன்று சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் கூட்டுறவு விடயம் பொறுப்பான அமைச்சரால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படும் 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவினால் சப்பிரகமுவ மாகாண கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஊழியர்கள் விடயம் தொடர்பில் செயற்படும் வகையில்.

(அ) நிச்சயிக்கப்பட்ட சம்பளத் திட்டங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள் உட்பட அனைத்து வர்க்கப்படுத்தல்களும் ;

(ஆ) அச்சட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுகையில் இடப்படும் எல்லாவிதமான கட்டளைகளும் ;

(இ) பொறுப்பேற்கப்பட்ட எல்லாவிதமான மேன்முறையீடுகளும் விசாரணை செய்வதற்கு ஆரம்பிக்கப்பட அத்துடன் விசாரணை முடிவடைந்து கட்டளைகளை விதிப்பதற்கு உள்ள எல்லா விதமான மேன்முறையீடுகளும் ;

(ஈ) ஆரம்பிக்கப்பட்ட எல்லாவிதமான சட்ட நடவடிக்கைகளும் ;

(உ) விதிக்கப்பட்ட எல்லா விதமான ஒழுங்குவிதிகள் மற்றும் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகள்;

(ஊ) செய்யப்பட்ட அனைத்து நியமனங்களும் பதவி உயர்த்தல்களும் ;

இந்நியதிச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ளவை போன்று சட்ட அதிகாரத்துடன் செல்லுபடியானவைகளாக இருத்தல் வேண்டும்.

(2) 2011 ஆம் ஆண்டின் யூலை 02 ஆந் திகதியும் 1712/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட ஒழுங்குவிதிகள் (கூட்டுறவு ஊழியர்கள் தாபனக் கோவை) சப்பிரகமுவ மாகாணத்தின் கூட்டுறவு அமைச்சரால் ஒழுங்குவிதிகள் ஒழுங்கு செய்யப்படும்வரை செல்லுபடியானதாக இருக்கும்.

18. கூட்டுறவுச் சங்கமொன்றின் ஏதாவதொரு பதவிக்காக சப்பிரகமுவ மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கின்றவொருவராக இருந்தால் மாத்திரமே சேர்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறாயினும் ஆணைக்குழுவின் கருத்தின்படி ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கத்தின் அத்தகைய பதவியொன்றிற்காக தகைமைகளையுடைய ஒருவர் சப்பிரகமுவ மாகாணத்தில் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு இயலாதிருக்கும் சந்தர்ப்பத்தில் அமைச்சரால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கிணங்க சங்கத்தினால் மேற்கூறிய ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்ட பின்பு ஆணைக்குழுவின் அனுமதியின்படி அம் மாகாணத்தில் நிரந்தர வதிவு இல்லாவிட்டாலும் தகைமைகளையுடைய ஒருவரை நியமனம் செய்து கொள்வதற்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிகாரமிருக்கும்.

வதிவு தொடர்பான தகைமைகள்.

19. கூட்டுறவுச் சங்கமொன்றின் ஏதாவதொரு பதவிக்கு நியமனம் செய்யப்படுகின்ற எந்தவொரு நபரும் அப்பதவிக்கு ஏற்புடைய சம்பளத்திட்டமொன்றில் வைக்கப்படுதல் வேண்டும். அது 27 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சங்கத்தின் வர்த்தகத்திற்கு அமைவாக நிச்சயிக்கப்படும் ஊழியர் வர்க்கத்திற்கும் வகுப்பிற்கும் ஏற்புடையதாகும் வகையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கமொன்றின் வர்த்தகத்தின் படியும் ஊழியர்களின் வர்க்கம் மற்றும் வகுப்பின்படியும் சம்பளத்திட்டங்கள் நிச்சயிக்கப்பட வேண்டும் என்பது பற்றி.

20. இந்நியதிச் சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளில் எவை குறிப்பிடப்பட்டிருந்தாலும் நியமன அதிகாரியின் இணக்கத்துடனும் தொடர்புடைய உத்தியோகத்தரினதும் விடயம் பொறுப்பான அமைச்சரின் இசைவுடனும் மாகாண அரசாங்க சேவையின் இரண்டாந்தரமாக்கப்பட்ட ஊழியரொருவர் சங்கமொன்றின் ஏதாவதொரு பதவிக்கு ஆணைக்குழுவினால் நிச்சயிக்கப்படக்கூடிய கால எல்லை ஒன்றிற்குள் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கும் வகையில் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படலாம்.

சப்பிரகமுவ மாகாண அரசாங்க சேவையிலிருந்து இரண்டாந்தரமாக்கப்படுதல்.

இப்பிரிவின் பணிகளுக்காக நியமன அதிகாரி என கருதப்படுவது, மாகாண அரசாங்க சேவையின் நியமன அதிகாரியாகும்.

21. (1) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய ஏதாவதொரு பணத்தொகையிலும் கூடியவொரு பணத்தொகையை பிணையாக வைக்கும்படி கூட்டுறவுச் சங்கமொன்றினால் ஊழியரொருவருக்கு பணிப்பிடப்படாதிருத்தல்.

ஊழியர் பிணைப் பணம்.

(2) கூட்டுறவுச் சங்கமொன்றின் எவரேனுமொரு ஊழியரால் பணம் மூலமான பிணையொன்று சங்கமொன்றின் பெயரில் வங்கியொன்றில் வைக்கப்படல் வேண்டும். அத்துடன் அதுதொடர்பான ஏதாவதொரு வட்டியை அவ்வூழியருக்குச் செலுத்தல் வேண்டும்.

22. (1) தொழில் வழங்குநர் ஒருவரான ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அச்சங்கத்தின் அனைத்து ஊழியர்களும் சட்டத்தின் மூலம் நியமிக்கப்படக்கூடிய ஏதாவதொரு பணத்தொகை தவணைதோறும் அங்கத்துவப் பணமாக ஊழியர் சேமபலாப நிதியத்திற்கும் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்துதல் வேண்டும்.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்.

(2) ஓய்வுபெறுதல், இராஜினாமா, பதவி நீக்கம், சேவையை கைவிட்டு விலகிச் செல்லல் அல்லது ஏனைய ஏதாவதொரு காரணத்தினால் சேவை முடிவடையச் செய்யப்படும் கூட்டுறவு ஊழியர் ஒருவர் தொடர்ந்து ஐந்து வருட காலம் சேவையாற்றி பூர்த்தி செய்திருப்பின் அவருக்கு அல்லது அவளுக்கு பணிக்கொடைக் கொடுப்பனவைச் செலுத்தல் வேண்டும்.

ஊழியர் பணிக் கொடைக் கொடுப்பனவு.

23. சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் அனைத்து ஊழியர்களும் அவர்கள் எச்சங்கத்தினால் சேர்த்துக்கொள்ளப்பட்டார்களோ அவர்கள் அச்சங்கத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் என்பது பற்றியும் அச்சங்கத்திற்கு ஆதரவாக செயல்புரிய வேண்டுமென்பது பற்றியும் சந்தேகம் நீங்குவதற்காக இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

கூட்டுறவு ஊழியர்கள், ஆணைக்குழுவின் ஊழியர்கள் அல்ல சங்கத்தின் ஊழியர்கள் என்பது பற்றி.

கூட்டுறவு ஊழியர்களை பதவி நீக்கம் செய்தல் அல்லது அவர்களுக்கு தண்டனை விதித்தல்.

24. (1) கூட்டுறவு ஊழியர் ஒருவரை பதவி நீக்கம் செய்தல் அல்லது ஏனைய ஒரு முறையிலான தண்டனையை விதித்தல் என்பன இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட அல்லது ஒழுங்கு செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்ற விதிகளுக்கு இணங்கவே தவிர வேறு விதத்தில் செய்யப்படாதிருத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் எதுவும் இவ்வாணைக்குழு ஸ்தாபிக்கப்பட்ட திகதிக்கு முன்பு நடைபெற்ற அல்லது ஏற்பட்ட ஏதாவதொரு ஒழுங்கீனமான அல்லது முறைகேடான ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் கூட்டுறவு ஊழியர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இவ்வேற்பாடுகளைப் பின்பற்றுவதற்கும் முடிவுபெறச் செய்வதற்கும் தடையாக இருக்கமாட்டாது.

(3) முறைப்படி ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் எவரேனும் ஒரு ஊழியருக்கு தண்டனை நியமித்தலுக்கு எதிராக அவ்வூழியரால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடொன்றில் அல்லது அதனுடன் தொடர்புடைய சட்ட நடவடிக்கையொன்றில் அவ்வூழியருக்கு நட்டஈடு எஞ்சிய சம்பளங்கள், தண்டப்பணத் தொகைகள் அல்லது ஏனையவொரு பணத்தொகை சங்கத்தின் மூலம் செலுத்தப்பட நேரிட்டால் அதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டிய நிர்வாகச் சபையின் தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்தும் மேற்கூறிய பணத்தொகையை சங்கத்திற்கு மீளச் செலுத்தும் பொறுப்பிற்கு கட்டுப்பட்டிருப்பார்கள்.

ஊழியர்களுக்கு ஏற்புடைய ஒழுங்குவிதிகள்.

25. (1) கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதாவது :-

(அ) கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களை வர்க்கப்படுத்தல், தரங்கள் மற்றும் வகுப்புகளைத் தீர்மானித்தல், சேர்த்துக்கொள்ளல், நியமனம் செய்தல், பணித்திறன்களை மதிப்பிடுதல், பயிற்சியளித்தல், பதவி உயர்த்துதல், இடமாற்றம் செய்தல், இராஜினாமாச் செய்தல், சேவையை முடிவடையச் செய்தல் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகள் என்பன தொடர்பிலும் ;

(ஆ) ஊழியர்களின் சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானித்து ஊழியர்களின் சம்பள முறைகள், கொடுப்பனவுகள் மற்றும் பணிக்கொடைகளைச் செலுத்தல், ஊழியர் நலன்புரி, முற்பணங்கள் அளிப்புகள், விடுமுறைகள், செயற்பாடுகள் மற்றும் மேன்முறையீடு தொடர்பிலும் ;

(இ) சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்புடைய அத்துடன் தேவைப்படுமெனக் கருதக்கூடிய ஏனைய காரணங்கள் தொடர்பிலும் அமைச்சரால் விதிகள் ஒழுங்கு செய்யப்படலாம்.

(2) சப்பிரகமுவ மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அவற்றின் ஊழியர்கள் இங்கு (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு காரணம் தொடர்பில் விதிக்கப்படும் அனைத்து ஒழுங்குவிதிகளாலும் கட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

தமது ஊழியர்கள் தொடர்பில் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள்.

26. (1) எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் ,

(அ) அதன் அனைத்து ஊழியர்கள் தொடர்பிலும் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு ஊழியர் தொடர்பிலும் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடிய வகையில் தேவைப்படக்கூடிய எல்லா விவரங்களும் அவற்றில் உள்ளடக்கியிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஆணைக்குழுவினால் ஊழியர்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என விதிக்கப்படக்கூடிய அறிக்கைகள், தகவல்கள், மற்றும் இடைக்கிடையே ஆணைக்குழுவிற்குத் தேவைப்படுமென விதிக்கப்படக்கூடிய அனைத்து விபரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) அச்சங்கத்தின் அலுவலகங்களுள் ஏதாவதொரு அலுவலகத்திற்குள் பிரவேசித்து, அதில் பேணிச் செல்லப்படும் புத்தகங்கள், கணக்கு அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்களைச் சோதித்துப் பார்ப்பதற்கும் அவற்றின் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் மேன்முறையீடொன்றில் அல்லது ஒழுக்காற்று விசாரணையொன்றில் நியாயமான தீர்வுகளுக்கு வருவதற்குத் தேவைப்படுமெனக் கருதக்கூடியவொரு பொருளை, தொகைக் களஞ்சியமொன்றை அல்லது ஏனைய ஏதாவதொரு இடத்தை அல்லது சொத்தைச் சோதித்துப் பார்ப்பதற்கும் அதற்காக அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவருக்கு அல்லது உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது ஊழியர் ஒருவருக்கு அவ்வாறு இடமளித்தல் வேண்டும்.

III ஆம் பகுதி

### கூட்டுறவு ஆணையாளரின் அதிகாரங்கள்

*ஆணையாளரால் சங்கங்கள் வர்க்கப் படுத்தப்படல் மற்றும் பணியாட் தொகுதி நிச்சயிக்கப்படல் வேண்டும் என்பது பற்றி.*

27\. (1) கூட்டுறவுச் சங்கங்களின் பதவிகளுக்கான சம்பளத் திட்டங்களைத் தீர்மானிக்கும் பணிக்காக கூட்டுறவுச் சங்கங்களை வர்க்கப்படுத்துவதற்கும் அச்சங்கங்களின் ஊழியர் வர்க்கங்கள் மற்றும் வகுப்புகளைத் தீர்மானிப்பதற்கும் ஒவ்வொரு வர்க்கத்திலும் வகுப்பிலும் இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கும் தேவைப்படுமெனத் தான் கருதக்கூடியவாறு இடைக்கிடையே மாற்றங்களைச் செய்வதற்கும் ஆணையாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(2) மேலே (1) ஆம் உட்பிரிவின்படி ஆணையாளரால் இடப்படும் பணிப்புகளுக்கு முரணாக எந்தவொரு நபரும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.

*தகைமைகள், சம்பளத் திட்டங்கள் தொடர்பில் ஆணைக்குழு ஆணையாளரின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பது பற்றி.*

28\. ஆணைக்குழுவினால், கூட்டுறவுச் சங்கங்களின் ஏதாவதொரு பதவிக்கு நியமனம் செய்வதற்குத் தேவையான தகைமைகளை நிச்சயித்தலும் ஏதாவதொரு வகுப்பின் அல்லது தரமொன்றின் ஏதாவதொரு பதவிக்கு அல்லது பதவிகளுக்கு வழங்கக்கூடிய சம்பளத் திட்டங்களைத் தீர்மானித்தலும் அச்சம்பளத்திட்டங்களை காலத்துக்குக்காலம் மீளமைப்பதும் ஆணையாளரின் இணக்கத்துடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

IV ஆம் பகுதி

### பலவித ஏற்பாடுகள்

*இடையூறுகளை நீக்கம் செய்தல்.*

29\. இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துகையில் அதன் மூலம் ஏற்பாடு செய்யப்படாத அல்லது செயற்படக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படாத காரணமொன்றின் அல்லது பிரச்சினையொன்றின் தொடர்பில் ஏதாவதொரு சந்தேகம் அல்லது இடையூறு ஏற்பட்டால், அமைச்சரால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் அந்த இடையூறை அல்லது சந்தேகத்தை நீக்கம் செய்யலாம். இல்லாவிட்டால் தீர்மானிக்கப்படலாம். அவ்வாறான கட்டளையொன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்பு அதற்குச் சட்ட அதிகாரமளித்தல் வேண்டும். அத்துடன் இந்நியதிச் சட்டத்தில் உள்ளடக்கி விதிக்கப்பட்டது போன்று செல்லுபடியானதாகவும் அதிகாரமுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

*அமைச்சரால் கட்டளைகள் விதிக்கப்படலாம் என்பது பற்றி.*

30 (1) பிரகடனப்படுத்தியே ஏனையவொரு முறையில் ஏற்பாடு செய்யப்பட்டால் அன்றி, கட்டளைகளை ஒழுங்கு செய்வதற்கு இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்திருப்பது அல்லது விதித்திருப்பது எவையேனும் காரணங்களுக்காக அல்லது காரணங்கள் தொடர்பானதாகவும் ஆயின் அந்த அனைத்துக் காரணங்கள் மற்றும் விதிக்கப்படவேண்டுமென இந்நியதிச் சட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள அல்லது விதிக்கப்பட்டுள்ள அனைத்துக் காரணங்களுக்கான கட்டளைகள் உட்பட இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காக அல்லது அதன் கொள்கைகளை வலுப்படுத்துவதற்காக தேவைப்படக்கூடிய அதேபோன்று ஆணைக்குழுவினால் விதிக்கப்படக்கூடிய அனைத்துக் கட்டளைகளும் ஆணைக்குழுவினால் ஒழுங்கு செய்யப்படலாம்.

(2) அத்தகைய எந்தவொரு கட்டளையும், அமைச்சரால் அங்கீகரிக்கப்படும் வரையும் அந்த அங்கீகாரம் தொடர்பிலான அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் வரையும் செயற்படாதிருத்தல் வேண்டும்.

(3) ஏதாவதொரு அறிவித்தல் (2) ஆம் உட்பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்பு அக்கட்டளை இங்கு ஒழுங்கு செய்யப்பட்டது போன்று செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் இரட்சணியம்.

31. எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் அல்லது செய்யப்பட்ட அல்லது செய்யப்படாத ஏதாவதொரு செயல் தொடர்பில் அல்லது ஆணைக்குழுவின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு ஆணைக்குழுவின் அங்கத்துவ நிலைமையில் அந்நபருக்கு அல்லது சட்டரீதியாக்கப்பட்ட கூட்டுத்தாபன நிலைமையில் ஆணைக்குழுவிற்கு எதிராக சிவில் அல்லது குற்றவியல்பான சட்ட நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவோ அல்லது தொடர்வதோ கூடாது.

ஒப்பந்த அல்லது நாட் சம்பள அடிப் படையில் ஊழியர் களைச் சேர்த்துக் கொள்ளல்.

32. இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளில் எவை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கம் அதன் வினைத்திறன் நோக்கமாக ஆணைக்குழுவின் முன் அனுமதியுடன்,

(அ) ஒப்பந்த அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட சேவை நிபந்தனைகளுக்கு இணங்க திறமைசாலி ஒருவரை அல்லது நிபுணரொருவரை சேவையில் சேர்த்துக் கொள்ளப்படலாம் ;

(ஆ) அமய அல்லது நாட் சம்பள அல்லது மணித்தியாலச் சம்பள அடிப்படையில் சேவை புரியும் ஊழியர்களை அல்லது துண்டு முறை அடிப்படையில் சம்பள செலுத்தும் ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்திக் கொள்ளலாம் ;

(இ) விசேடமான சந்தரப்பங்களில் மாத்திரம் ஆகக்கூடியது 06 மாதங்களுக்கு ஏதாவதொரு பதவியில் பதிலாளாக சேவையில் ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

அவ்வாறாயினும் ஆணைக்குழுவின் இணக்கம் இல்லாமல் அத்தகைய ஊழியர்களின் சேவையை நிரந்தரப்படுத்திக் கொடுக்க முடியாது.

குற்றங்கள்.

33. (1) (அ) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது ;

(ஆ) ஆணைக்குழுவினால் இடப்படுகின்ற ஏதாவதொரு கட்டளை வேண்டுமென்றே புறக்கணிக்கின்ற, நிராகரிக்கின்ற அல்லது கவனிக்காதிருக்கின்ற அல்லது இந்நியதிச் சட்டத்தின் தேவைகளின்படி ஆணைக்குழுவிற்கு அல்லது முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட ஏனையவொரு நபரிடம் சமர்ப்பிக்கும்படி பணிப்பிடப்படும் ஏதாவதொரு தகவல் சமர்ப்பிப்பதை வேண்டுமென்றே புறக்கணிக்கின்ற அல்லது நிராகரிக்கின்ற அல்லது கவனத்திற் கொள்ளாதிருக்கின்ற அல்லது ;

(இ) பொய்யான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கின்ற அல்லது பொய்யான தகவலொன்றைச் சமர்ப்பிக்கின்ற ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கம் அல்லது நிர்வாகச் சபை அல்லது எவரேனுமொரு உத்தியோகத்தர் அல்லது ஊழியர் இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) (1) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு குற்றத்தைப் புரிகின்ற எந்தவொரு கூட்டுறவுச் சங்கமும் அல்லது எந்தவொரு நபரும் மாஜிஸ்திரேட் நீதிவான் ஒருவர் முன்னிலையில் நடத்தப்படும் சுருக்க முறையிலான வழக்கு விசாரணையொன்றின் பின்பு குற்றவாளியாக்கப்பட்டால் ஐந்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாத அபராதமொன்றை விதிப்பதற்கு அல்லது 06 மாதங்களுக்குக் கூடுதலாகாத காலகட்டமொன்றுக்கு சிறைத்தண்டனை விதிப்பதற்கு அல்லது இந்த இரு தண்டனைகளும் விதிப்பதற்கு ஆளாக்கப்படலாம்.

(3) எவரேனுமொரு ஊழியரை மீளவும் சேவையில் ஈடுபடுத்துமாறு அல்லது அத்தகைய எந்தவொரு கட்டளையும் ஆணைக்குழுவினால் இடப்பட்ட சந்தர்ப்பத்தில் அத்தகைய கட்டளைகளின்படி செயல்புரிதலை புறக்கணித்தல் காரணமாக ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கம் குற்றவாளியாக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அத்தகைய கூட்டுறவுச் சங்கமொன்று.

(i) (2) ஆம் உபபிரிவின் கீழ் விதிக்கப்படக்கூடிய தண்டனையொன்றுக்கு மேலதிகமாக அந்தக் குற்றம் செய்யப்பட்ட பின்பு அந்த புறக்கணிப்பு மேன்மேலும் செய்துகொண்டு செல்லும் ஒவ்வொரு தினத்திற்காகவும் இருநூற்றி ஐம்பது ரூபா வீதமான தண்டப் பணத்தொகையொன்றைச் செலுத்துவதற்கு ஆளாக்கப்படும் அத்துடன்

(ii) ஆணைக்குழுவின் விதிகளுக்கிணங்க அவ்வாறு ஊழியர் மீளவும் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டிய தினத்திலிருந்து நீதிமன்றத்தினால் குற்றவாளிக்கப்பட்ட திகதி வரையிலான காலகட்டத்திற்கு அவ்வூழியரின் சேவையை முடிவடையச் செய்யாமல் தொடர்ச்சியாகச் சேவையில் ஈடுபடுத்திய ஒருவராகக் கருதி அவருக்கு உரித்தாக வேண்டிய சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அனைத்தையும் செலுத்துவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) எவரேனுமொரு ஊழியருக்கு சம்பளமொன்றை அல்லது வேறொரு வகையிலான கொடுப்பனவை அல்லது நட்டஈட்டைச் செலுத்துமாறு ஆணைக்குழுவினால் உத்தரவிட்டிருக்கும் சந்தர்ப்பமொன்றில் அந்தப் பணச் செலுத்தலைப் புறக்கணிக்கும் ஏதாவதொரு சங்கம் குற்றவாளியாக்கப்பட்டால் மேலே (2) ஆம் உபபிரிவின் கீழ் விதிக்கப்படக்கூடிய தண்டனைக்கு மேலதிகமாக ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள பணத்தையும் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்த உபபிரிவின் (ii) ஆம் (iii) ஆம் பந்திகளின் கீழ் கூட்டுறவுச் சங்கம் செலுத்தவேண்டிய பணத்தொகையானது, அச்சங்கத்தை குற்றவாளியாகத் தீர்ப்பளித்த நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் தண்டப்பணத்தொகை ஒன்றைப்போல் அந்த நீதிமன்றத்தின் கட்டளை ஒன்றின் பிரகாரம் அறவிடப்படலாம். அவ்வாறு அறவிடப்படும் பணத்தை ஊழியருக்குச் செலுத்தல் வேண்டும்.

34. தமது கடமைகளை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தைக் தவிர்ந்த வெளிப்படையாக அல்லது மறைமுகமான முறையில் அல்லது ஏதாவதொரு வகையில் ஆணைக்குழுவின் ஏதாவதொரு தீர்ப்பு தொடர்பில் எவரேனுமொரு அங்கத்தவருக்கு ஏதாவதொரு அழுத்தத்தைச் செய்கின்ற அல்லது செய்வதற்கு முயற்சி செய்கின்ற எந்தவொரு நபரும் குற்றமொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும். அத்துடன் மாஜிஸ்திரேட் நீதிவானொருவர் முன்னிலையில் நடத்தப்படும் சுருக்க முறையிலான வழக்கு விசாரணையொன்றின் பின்பு குற்றவாளியாக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஐந்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாத அபராதமொன்றைச் செலுத்துவதற்கு அல்லது 06 மாதங்களுக்குக் கூடுதலாகாத காலகட்டமொன்றுக்கு சிறைத்தண்டனைக்கு அல்லது இவ்விருவகையிலான தண்டனைகளுக்கும் ஆளாக்கப்படலாம்.

*ஆணைக்குழு விற்கு அழுத்தங் களைச் செய்தல்.*

35. ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவர் அல்லது அதன் செயலாளர் அல்லது அதன் பணியாட்தொகுதியின் எவரேனுமொரு அங்கத்தவர் அல்லது ஏனையவொரு நபர் தனது உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தைத் தவிர்ந்த தனது கடமைகளின்போது தனக்கு அறிந்துகொள்ளக்கிடைக்கும் ஆவணமொன்றின் அல்லது செய்தியொன்றில் அடங்கும் தகவலொன்றை வெளியே கொடுத்தலோ, வெளிப்படுத்தலோ கூடாது.

*அனுமதியின்றி தகவல்களை வெளியிடக் கூடா தமை பற்றி.*

36. ஆணைக்குழுவின் தவிசாளரால் எழுத்துமூலமாக அனுமதியளிக்கப்பட்டிருந்தாலே தவிர, ஆணைக்குழு அல்லது அதன் எவரேனுமொரு அங்கத்தவர் அல்லது உத்தியோகத்தர் அத்துடன் ஏதாவதொரு சங்கம் அல்லது அச்சங்கத்தின் நிர்வாக சபையின் அங்கத்தவர் ஒருவர் அல்லது உத்தியோகத்தர் அல்லது அங்கத்தவருக்கு இடையில் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பில் பரிமாற்றப்பட்ட எழுத்துமூலமான செய்தியொன்றில் உள்ளடங்கிய ஏதாவதொரு தகவல் ஆணைக்குழுவின் தவிசாளரின் எழுத்துமூலமான அனுமதியின்றி ஏதாவதொரு சட்ட நடவடிக்கையில் வெளிப்படுத்தலோ சமர்ப்பித்தலோ கூடாது.

*ஆணைக்குழுவின் செய்தியொன்று சிறப்புரிமை களைக் கொண் டிருக்கும்.*

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அவற்றில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பில் தொழிற்பிணக்குகள் சட்டம் ஏற்புடையதாக இருக்கின்றமை பற்றி.

37. (1) தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தொழில் நியாய அதிகாரச் சபையிடம் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவரால் ஏதாவதொரு காரணம் தொடர்பில் அச்சட்டத்தின் 31 (ஆ) பிரிவின் கீழ் வேண்டுகோளொன்று சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் அக்காரணம் தொடர்பில் அல்லது அர்த்தமுள்ளதாக அக்காரணம் தொடர்பில் சேவையில் ஈடுபட்டுள்ளவரால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடொன்றினை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் சேவையில் ஈடுபட்டுள்ள எவரேனுமொருவர் ஏதாவதொரு காரணம் தொடர்பில் வேண்டுகோளொன்று ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் அக்காரணம் தொடர்பில் அல்லது அர்த்தமுள்ளதாக அக்காரணம் தொடர்பில் அந்த சேவையில் ஈடுபட்டுள்ளவருக்கு தொழிற்பிணக்குச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொழில் நியாய அதிகாரச் சபையிடம் வேண்டுகோளொன்றைச் சமர்ப்பிப்பதற்கு அதிகாரமற்றதாக இருத்தல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கிச் செயற்பட வேண்டும் என்பது பற்றி.

38. இந்நியதிச் சட்டத்தின் சிங்களம், தமிழ் ஆகிய உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள உரையே மேலோங்கிச் செயற்படல் வேண்டும்.

பொருள் கூறல்.

39. சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி இந்நியதிச் சட்டத்தில் -

"அமைச்சர்" என்பது, சப்பிரகமுவ மாகாண சபையின் கூட்டுறவு விடயம் பொறுப்பான அமைச்சரையும்.

"நிர்வாக சபை" என்பது, பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றின் விவகாரங்கள் தொடர்பிலான முகாமைத்துவம் பொறுப்பளிக்கப்பட்ட அச்சங்கத்தின் நிர்வாகச் சபையை பொருட்படுத்துவதுடன் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பணிப்பாளர் சபையினாலும் ஆணையாளராலும் நியமனம் செய்யப்பட்டவர்கள் அதில் அடங்குவார்கள்.

" ஆணையாளர்" என்பது, சப்பிரகமுவ மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கப் பதிவாளரையும் .

"உத்தியோகத்தர்" என்பது, ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கம் தொடர்பில் குறிப்பிடப்படுகின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அச்சொல்லின் மூலம் கூட்டுறவுச் சங்கமொன்றின் நிர்வாக சபையின் அங்கத்தவர்களையும் செயலாளர் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களையும்.

"கூட்டுறவுச் சங்கம்" என்பது, கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்புடைய சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றையும்.

"ஊழியர்" என்பது, இந்நியதிச் சட்டத்தின் பொருள் வரைவிலக்கணத்தின்படி கூட்டுறவு ஊழியர் ஒருவரையும் பொருட்படுத்தும்.

**1 ஆம் அட்டவணை**

## சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் தவிசாளரால்/அங்கத்தவர் ஒருவரால் 10 (1) ஆம் பிரிவின் பிரகாரம் சத்தியப்பிரமாணம் செய்தல்/உறுதிமொழி கூறுதல்

சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் தவிசாளராக/ அங்கத்தவர் ஒருவராக நியமனம் செய்யப்பட்டுள்ள.......................................................................................................................... ஆகிய நான், என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் தவிசாளர்/அங்கத்தவர் பதவிக்கு உட்பட்ட கடமைகளை பயத்துடனோ, பக்கச்சார்பாகவோ, தயவுடனோ, அல்லது துவேசத்துடனோ இன்றி முழுமையாக நியாயமான முறையில் நிறைவேற்றுவேன் என்பதையும் எனது உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுகையில் மேற்கூறிய பதவிக்கு உட்பட்ட பணிகள் தொடர்பிலான எந்தவொரு தகவலும் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபருக்கும் வெளிப்படுத்த மாட்டேன் என்பதையும் நேர்மையுடனும் பயபக்தியுடனும் பிரகடனம் செய்து சத்தியப்பிரமாணம் செய்கின்றேன்/உறுதிமொழி கூறுகின்றேன்.

.....................................................
கையொப்பம்.

2011 ஆம் ஆண்டு............. மாதம் .......... ஆந் திகதி என் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது/உறுதிமொழி கூறப்பட்டது.

.............................................
சப்பிரகமுவ மாகாண,
மேல் நீதிமன்ற நீதிவான்.

**2 ஆம் அட்டவணை**

**சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் செயலாளரால் /உத்தியோகத்தர் ஒருவரால் 10 (2) ஆம் பிரிவின் பிரகாரம் சத்தியப்பிரமாணம் செய்தல்/உறுதிமொழி கூறுதல்**

சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் செயலாளராக/உத்தியோதகத்தர் ஒருவராக மேற்கூறிய பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள ..................................................... ........................................... ............................... ஆகிய நான், சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் செயலாளர்/உத்தியோகத்தர் பதவிக்கு உட்பட்ட பணிகளை நிறைவேற்றுகையிலே தவிர்ந்த ஏனைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்கூறிய பதவியின் கடமைகளை நிறைவேற்றுகையில் எனக்கு அறிந்துகொள்ளக் கிடைக்கும் ஆவணமொன்றில், செய்தியொன்றில் அல்லது தகவலொன்றில் அடங்கிய விபரங்களை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ வெளிப்படையாக அல்லது மறைமுகமாக எந்தவொரு நபருக்கும் வெளிப்படுத்தமாட்டேன் என்பதை நேர்மையுடனும் பயபக்தியுடனும் பிரகடனம் செய்து சத்தியப்பிரமாணம் செய்கின்றேன்/உறுதிமொழி கூறுகின்றேன்.

.....................................................
கையொப்பம்.

2011 ஆம் ஆண்டு.................. மாதம் ................ஆந் திகதி என் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது/ உறுதிமொழி கூறப்பட்டது.

.............................................
தவிசாளர்,
சப்பிரகமுவ மாகாண கூட்டுறவு
ஊழியர்கள் ஆணைக்குழு.

9- 1139

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.